பொது சுற்று நிருபம்
2014ல் மீட்கப்பட்டது
02-84/2014

எனது இல: DGHS / D / FHB / 2010
பொது சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
சுகாதார அமைச்சு
சுவசிரிபாய
இல.385,வண. பத்தேகம விமலவன்ச தேரோ
மாவத்தை.
கொழும்பு - 10
22 /05/ 2014

To :
எல்லா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
எல்லா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
பணிப்பாளர் - தேசிய விஞ்ஞான சுகாதார சேவைகள் நிறுவனம்
பிரதான சுகாதார வைத்திய அதிகாரி ( நகரசபை - கொழும்பு, கண்டி, காலி )
எல்லா சுகாதார வைத்திய அதிகாரிகள்
எல்லா நிறுவனத்தலைவர்கள்.

## பிரசவத்தின் பின் பராமரிப்பு

பிரசவத்திற்குப்பின்னான காலம் தாய்க்கும் குழந்தைக்கும் மிகவும் நெருக்கடியான காலமாகும். பல தாய் மரணங்கள் மற்றும் புதிதாய்ப் பிறந்த குழந்தை இறப்புகள் தாயினதும் குழந்தையினதும் நோய் நிலைகள் இக்காலத்தில் இடம்பெறுகிறது.
தற்போதைய புள்ளிவிபரங்களின் படி கர்ப்பகால, மற்றும் பிரசவகால பராமரிப்புகள் திருப்திகரமாயிருந்த போதும் பிரசவத்தின் பின் பராமரிப்பு மேலும் முன்னேற்றபட வேண்டும். இதற்கமைய பிரசவ பின்பராமரிப்பு சேவை வழங்குதல் பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.
தாய் சேய் நல நிகழ்ச்சித் திட்டதினை மதிப்பீடு செய்து கண்காணித்தலும் பிரசவ பின்பராமரிப்பு சேவை மேற்பாவையினை மேலும் வலுப்படுத்துதலும் அவசியமானவை. ஒரு மாதத்திற்கு திட்டமிட்டுள்ள 6 மேற்பார்வைகளில் பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர் 2 இனை பிரசவ பின்பராமரிப்பு சேவையை மேற்பார்வையிடவேண்டும். மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர் ஒரு மாதத்தில் செய்ய வேண்டிய 10 மேற்பார்வைகளில் 3 இனை பிரசவ பின்பராமரிப்பு மேற்பார்வையாகச் செய்ய வேண்டும். இந்தப் பிரசவ பின்பராமரிப்பு மேற்பார்வைகள் கட்டாயமானதாக கருதப்பட வேண்டும்.

### 1.பிரசவப் பின் வீட்டுத்தரிசிப்புகள்

1.1. பிரசவப் பின் வீட்டுத்தரிசிப்பு பின்வருமாறு நடாத்தப்படவேண்டும் சாதாரண யோனிவழிப் பிரசவத்தின் பின் 4 வீட்டுத்தரிசிப்புகள் பின்வரு மாறு செய்யப்பட வேண்டும்.
1வது வீட்டுத் தரிசிப்பு - பிரசவத்தின் பின்பு 1-5 நாட்களுக் கிடையில்.
2வது வீட்டுத் தரிசிப்பு - பிரசவத்தின் பின்பு 5-10 நாட்களுக் கிடையில்.
3வது வீட்டுத் தரிசிப்பு - பிரசவத்தின் பின்பு 14-21 நாட்களுக் கிடையில்.
4வது வீட்டுத் தரிசிப்பு - பிரசவத்தின் பின்பு 42 நாட்களுக் .

ஒரு வீட்டுப் பிரசவத்தின் பின் பின்வருமாறு வீட்டுத்தரிசிப்பு செய்யப்பட வேண்டும்.
வீட்டுப்பிரசவத்தின் பின்னர் முதல் 10 நாட்களுக்குள் 3 வீட்டுத்தரிசிப்புகள் செய்யப்பட வேண்டும்.

- 4வது வீட்டுத்தரிசிப்பு - பிரசவத்தின் பின்பு 14-21 நாட்களுக் கிடையில்.
- 5வது வீட்டுத்தரிசிப்பு - பிரசவத்தின் பின்பு 42 நாட்களுக் .

1.2
ஆபத்து / சிக்கல்களிக் கொண்ட பிரசவப் பின் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் மேலதிக விட்டுத்தரிசிப்புகள் தேவைப்படின் குறைந்த கால இடை வெளிகளில் செய்யப்பட வேண்டும். இறப்புப்பிரசவங்கள் / 1ம் 28 நாட்களுக்குள் குழந்தை இறந்திருப்பின் மேற்குறிப்பிட்ட படி மேலதிக விட்டுத்தரிசிப்புகள் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும்.
1.3
கருச்சிதைவேற்பட்ட தாய்மாருக்கு தேவையேற்படும் போது வீட்டுத்தரிசிப்பு வழங்கப்பட வேண்டும்.

2. ஆபத்து நிலைகளைக் கொண்ட தாய்மாரும் குழந்தைகளும்
2.1
பிரசவப் பின் காலத்தில் ஒருதாயில் / புதிதாய்ப்பிறந்த குழந்தையில் ஒரு ஆபத்து நிலை ஏற்படின் உடனடியாக தேவையான வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைக்கு அவர்களை அனுப்ப வேண்டியது மிகவும் அவசியம். இவ்வாலோசனைய முறையாகச் செயற்படுத்தியுள்ளனரா என்பதையும்இதைக்குறிந்து குடும்பத்தார் செய்ய வேண்டியவற்றையும் அவர்சளுக்கு விளக்குவதும் குடும்ப நல உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2.2
ஒரு அவசர நிலையெற்படும் போது தாயை / குழந்தையை அருகாமையில்லுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பத்தேவையான நடவடிக்கைகளை எடுப்பது குடும்ப நல உத்தியோகத்தரின் கடமையாகும்.

3. பிரதேசத்தை விட்டு வெளியேறும் தாய்மாருக்கான பிரசவப்பின் பராமரிப்பு

பிரசவத்தின் முன்பாகவோ / அதன் பின்னரோ ஒரு கர்ப்பவதி பிரதேச்தை விட்டு வெளியேறுவாராயின் அது கர்ப்பவதிகளின் பதிவேட்டிலும் கர்ப்பவதிக் குறிப்போடு 512A,B யிலும் எழுதப்படவேண்டும்.
தாயின் புதிய முகவரியும் இவ்வட்டையில் குறிப்பிடப்பட வேண்டும். தாயின் புதிய முகவரி அப்பகுதிக்குரிய குடும்ப நல உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டு பிரசவப்பின்பராமரிப்பு சேவை அவரால் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். இதற்காக பின்வரும் பொறிமுறையைப் பின் பற்றவும்.
தாயின் புதிய முகவரி அதே MOH பகுதியிலேயே இருக்குமாயின் உரிய PMH ற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இது MOH ற்கும் தெரியப் படுத்தப்பட வேண்டும். புதிய முகவரி வேறெரு MOH பகுதிக்குரியதாயின் தற்போதய MOH இனால் புதிய பகுதி MOHற்கு இது குறித்த ஒரு கடிதம் அனுப்பப்பட வேண்டும். MOH பணிமனையில் அப்பகுதியிலிருந்து வெளியேறும் எல்லத்தாய்மாரது விபரங்களும், தற்காலிகமாக வசிக்க வரும் தாய்மாரின் விபரங்களும் தனி ஒரு பதிவேட்டில் எழுதபட்டு பேணப்பட வேண்டும். புதிய MOH பகுதிக்கு பிரசவத்திற்காக வரும் தாய்மார் முன்னைய MOH பகுதியில் ஏற்கனவே பதிவு செய்யப்படாதிருப்பின் இப்பிரசவம் புதிய PHM இனால் பதிவு செய்யப்பட வேண்டும்.

4. பிரசவப் பின் சிகிச்சா நிலையம்

பிரசவத்தின்பின் 4 - 6 வாரங்களுக்கிடையில் அப்பகுதிக்குரிய PHM எல்லாத் தாய் மாரையும் பிரசவப் பின்னான சிகிச்சா நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். பிரசவப்பின் சிகிச்சா நிலையம் ஒருங்கிணைந்த சிகிச்சா நிலையத்தின் ஒரு பகுதியாகவே எப்போதுமிருத்தல் வேண்டும். எல்லாத் தாய்மாருக்கும் பிரசவப்பின் சிகிச்சா நிலைம் வர வேண்டிய திகதி, பிரசவப்பின் வீட்டுத்தரிசிப்பின் போது வழங்கப்பட்டு அது 512A யிலும் பிள்ளையின் வளர்ச்சிவிருத்திப் பதிவேட்டிலும் குறிப்பிடப்படவேண்டும். பிரசவப்பின் சிகிச்சா நிலைய வரவுகள் சிகிச்சா நிலைய

வரவுப்பதிவேட்டிலும் சிகிச்சா நிலையச் சுருக்கத்திலும் பதிவு செய்யப்பட வேண்டும். பிரசவப்பின் சிகிச்சா நிலையத்திற்கு வருகை தந்த தாய்மாரின் எண்ணிக்கை பிரசவப்பின் சிக்கல்களுக்குட்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை, விசேட சிகிச்சைக்காக வைத்திய சாலைகளுக்கு அனுப்பப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை போன்ற விபரங்கள், தாய் சேய் நல காலாண்டு அறிக்கையில் H527 பதிவு செய்யப்படல் வேண்டும்.

எல்லாத் தாய்மாரும் ஒரு மருத்துவ அதிகாரியினால் பார்வையிடப்பட்டு தேவையான குறிப்புகள் குறிப்பேடு 512A யிலும் Bயிலும் எழுதப்படல் வேண்டும். எல்லாத் தாய்மாரும் எடின்பெரோ பிரசவபின் மனஅழுத்த அளவீட்டின்படி மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். அதில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி தேவையான தாய்மார்கள், மன நல சிகிச்சா நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

5.பிரசவப் பின் காலப்பகுதியில் நுண்போசணைப் பொருட்களை வழங்குதல்

ஒவ்வொரு தாயும் பிரசவப்பின் பகுதியின் முதல் 6 மாதம் முடியும் வரை பின் வரும் விற்றமின் மாத்திரைகளை பிரசவப்பின் சிகிச்சா நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

- போலிக்கமிலம் கொண்ட இரும்பு மாத்திரைகள் ( இரும்பு போலேற் )
- அல்லது இரும்பும், போலிக்கமிலமும் தனித்தனியாக - தினசரி 1 மாத்திரை.
- விற்றமின் C - தினசரி 1 மாத்திரை
- கல்சியம் லக்றேற் - தினசரி 1 மாத்திரை.

6.பிரசவப்பின் காலத்தில் குடும்பத்திட்டமிடல்

ஒவ்வொரு தாய்க்கும் எல்லா குடும்பத்திட்டமிடல் முறைகளும் கர்ப்பகாலப் பகுதியில் விளக்கப்பட்டு, பிரசவப்பின் காலம் 6ம் வாரமளவில் குடும்பத்திட்டமிடல் சிகிச்சா நிலையங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

7.கர்ப்பகால, பிரசவப்பின்கால நோய் நிலைகளை அறிவித்தல்

- முதலாவது பிரசவப்பின்கால வீட்டுத் தரிசிப்பின் போது அத்தாயின் கர்ப்பகால நோய் நிலைகள் அறிக்கை செய்யப்படல் வேண்டும்.
- பிரசவப்பின்கால நோய் நிலைகள், இனங்காணப்படும் போதெல்லாம் ஒவ்வொரு பிரசவப் பின் வீட்டுத்தரிசிப்பின் போதும் அறிக்கை செய்யப்படல் வேண்டும்.

வைத்திய சாலையிலிருக்கும் போது ஏற்பட்ட சிக்கல்களும் அறிக்கை செய்யப்படல் வேண்டும் ( பிரசவத்தின் பின்னான குருதிப்பெருக்கு, உள்தங்கிய சூல்வித்தகம், போன்றவை ) ஆயினும் ஒரே நோய் நிலை இரண்டு தடவைகள் அறிக்கை செய்வது கவனமாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

8.பிறப்பு நிறைக் குறைவினை அறிக்கை செய்தல்

வைத்தியசாலையிலிருந்தும் வெளிகளத்திலிருந்தும் கிடைக்கப்பெறும் புள்ளிவிபரங்களை ஒப்பிட்டுப்பார்க்கையில், வெளிக்களத்திலிருந்து அறிக்கை செய்யப்படும் பிறப்பு நிறைகுறைவுகளின் எண்ணிக்கை குறைவாயுள்ளது தெரிய வருகிறது. முதலாவது பிரசவப்பின் வீட்டுதரிசிப்பின்போது CHDR ஐப் பரிசோதித்து பிறப்பு நிறையை சரியாக அறிவிக்க வேண்டியது PHMன் பொறுப்பாகும்.

தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் அடங்கியுள்ளவற்றை எல்லா MOH மற்றும் வேறு உங்கள் பகுதியிலுள்ள வெளிக்கள ஊழியர்களுக்கு தெரியப்படுத்தி தேவையான அறிவுறுத்தல்களை வழங்கவும்.

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health,
385, "Suwasiripaya",
Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

Dr. பி . ஜி . மஹிபால
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பிரதி :

1. உதவிப்பணிப்பாளர் ( பொது சுகாதார சேவைகள 1 )
2. உதவிப்பணிப்பாளர் ( பொது சுகாதார சேவைகள 11 )
3. உதவிப்பணிப்பாளர் ( மருத்துவ சேவைகள் சேவைகள 1 )
4. உதவிப்பணிப்பாளர் ( மருத்துவ சேவைகள் சேவைகள 11 )
5. பணிப்பாளர் ஆரம்ப சுகாதார சேவைகள
6. பணிப்பாளர் ( தாய் சேய் நலம் )
7. பணிப்பாளர் ( கல்வியூட்டல் மற்றும் மேம்பாடு )
8. தாய் சேய் நல வைத்திய அதிகாரிகள்
9. சுகாதார வைத்திய அதிகாரிகள்
10. நிறுவனத் தலைவர்கள்.
11. பொறுப்பு வைத்திய அதிகாரி / பதிவு செய்த வைத்திய அதிகாரி.